මගේ අංකය
எனது இல.
My No. } Pen/Pol/06/11 - 2024

ඔබේ අංකය
உமது இல.
Your No. } ..................................

දිනය
திகதி
Date } 2025.09. 30

**ஓய்வூதிய ஆலோசனைக் கடிதம் : 03/2025**

சகல மாவட்ட செயலாளர்கள்

சகல பிரதேச செயலாளர்கள்

**<u>ஓய்வூதியர்களுக்கு ரூபா 3,000/-தொகை விசேட இடைக்கால மாதாந்தக் கொடுப்பனவு ஒன்றினை வழங்குதல்</u>**

அரசின் சகல ஓய்வூதியர்களுக்கும் ரூபா 3000/- தொகை விசேட இடைக்கால மாதாந்தக் கொடுப்பனவினை 2024 ஒக்டோபர் மாதம் முதல் வழங்குவதற்காக அப/24/1992/704/007 ஆம் இலக்க மற்றும் 2024.10.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் ஊடாக அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

02. 2024 ஒக்டோபர் மாதம் முதல் இந்தக் கொடுப்பனவு ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.

03. மேற்படி கொடுப்பனவினை கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு ஒத்தியங்கும் வகையில் உரித்தாக்கிக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

i. பல ஓய்வூதியங்களைப் பெறும் ஓய்வூதியர் ஒருவருக்கு உரித்தாவது மாதம் ஒன்றிற்கு ரூபா 3,000/- தொகையாகிய ஒரு கொடுப்பனவு மாத்திரமே ஆகும்.

உதா :-

(அ) சிவில் ஓய்வூதியம் மற்றும் விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் ஆகிய இரண்டினையும் எவரேனும் ஒரு ஓய்வூதியர் பெற்றுவரும் சந்தர்ப்பம் ஒன்றில் சிவில் ஓய்வூதியத்திற்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

(ஆ) அங்கவீன ஓய்வூதியம் மற்றும் சேவை ஓய்வூதியம் ஆகிய இரண்டினையும் எவரேனும் ஒரு ஓய்வூதியர் பெற்றுவரும் சந்தர்ப்பம் ஒன்றில் சேவை ஓய்வூதியத்திற்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

(இ) ஒரே உறுப்புரிமையாளருக்காக தங்கிவாழ்வோர் கொடுப்பனவு மற்றும் விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் ஆகிய இரண்டினையும் தங்கிவாழும் ஒருவர் பெற்றுவரும் சந்தர்ப்பம் ஒன்றில் விதவைகள் / தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்காக இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.

Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk

(ஈ) அங்கவீன ஓய்வூதியத்தினை மாத்திரம் அல்லது தங்கிவாழ்வோர் கொடுப்பனவினை மாத்திரம் (தங்கி வாழ்வோர் கொடுப்பனவு ஓய்வூதியம் ஒன்றாகக் கருதப்படுவதனால்) பெற்றுக் கொள்ளும் நபர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

ii. புண்ணிய உதவிக் கொடுப்பனவு மற்றும் காயங்களுக்கான கொடுப்பனவு என்பவற்றிற்காக இந்த ரூபா 3,000/- தொகைக் கொடுப்பனவு உரித்தாவதில்லை.

iii. ஓய்வூதியம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ளாத கொடுப்பனவுகளை மாத்திரம் பெற்றுக்கொள்ளும் நபர் ஒருவருக்கு இந்த ரூபா 3,000/- தொகைக் கொடுப்பனவு உரித்தாவதில்லை.

iv. மீண்டும் திருமணம் முடித்து ஓய்வூதியத்தில் 50% இனைப் பெற்றுக்கொள்ளும் விதவைகளுக்கு உரித்தாவது இந்தக் கொடுப்பனவில் 50% மாத்திரமே ஆகும்.

v. ஓய்வூதியம் ஒன்று பல பயனாளிகளுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் உரிய சதவீதத்திற்கு அமைய இந்தக் கொடுப்பனவினையும் சதவிகிதமாக பகிர்ந்து வழங்குதல் வேண்டும்.

vi. வெளிநாடு சென்றிருக்கும் ஓய்வூதியர்களுக்கும் இந்தக் கொடுப்பனவு உரித்தாகும்.

vii. 2025.01.01 ஆம் திகதியும் சேவையில் ஈடுபட்டு இறுதியாக 2025.03.31 ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னரான சேவையின் பின்னர் ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களுக்கு 2025.06.30 ஆம் திகதி வரை மாத்திரம் ஓய்வூதியத்துடன் இந்தக் கொடுப்பனவு உரித்தாகும். 2025 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவிற்கு அமைய திருத்தம் செய்யப்பட்ட புதிய சம்பள அளவுத்திட்டத்தின் மொத்த மாதாந்தச் சம்பளத்தின் அடிப்படையில் 2025.07.01 ஆம் திகதி முதல் ஓய்வூதியம் உரித்தாக்கப்படுவதனால் அத்தினம் முதல் ஓய்வூதியத்துடன் இந்தக் கொடுப்பனவு உரித்தாவதில்லை.

viii. 2025.04.01 ஆம் திகதிய சேவையில் இருந்து அதன் பின்னர் ஓய்வுபெறும் ஓய்வூதியர்களுக்கு 2025 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கு அமைய திருத்தம் செய்யப்பட்ட புதிய சம்பள அளவுத்திட்டங்களின் மொத்த மாதாந்த சம்பளத்தின் அடிப்படையில் ஓய்வூதியம் உரித்தாக்கப்படுவதனால் ஓய்வூதியத்துடன் இந்தக் கொடுப்பனவு உரித்தாவதில்லை.

04. மேற்படி கொடுப்பனவு மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய மாத்திரம் உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேற்படி நிபந்தனைகளுக்கு ஒத்தியங்காத வகையில் ஏதேனும் கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருப்பின் மேற்படி கொடுப்பனவினை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். மேலதிகமாக கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருப்பின் மீள அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் வேண்டும்.

05. ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதிய முகாமைத்துவத் தரவு முறைமையில் நிலவும் தரவுகளின் அடிப்படையில் இந்தக் கொடுப்பனவினை உரித்தாக்குதல் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக பிரதேச செயலகங்களில் நிலவும் ஓய்வூதியக் கோப்புக்களுக்கு அமைய பரீட்சித்துப் பார்த்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ள முறையில் ஏதேனும் சீர்செய்தல் ஒன்று

மேற்கொள்ளப்பட வேண்டும் எனின் உடனடியாக அதற்கு உரிய வகையில் தரவு முறைமையில் சீராக்கல்களை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

06. இந்தக் கொடுப்பனவு உரித்தாக வேண்டிய, எனினும் ஓய்வூதியத் திணைக்களத்தினால் கொடுப்பனவினை வழங்குதல் ஆரம்பிக்கப்பீடாத ஓய்வூதியர் ஒருவருக்கான கொடுப்பனவினை உரித்தாக்கிக் கொடுப்பதற்காக Allowances Arrears Reason இன் கீழ் AR இனை முன்வைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

07. அரசாங்க நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளர் அவர்களின் அனுமதி மற்றும் தேசிய வரவுசெலவுத்திட்ட பணிப்பாளர் நாயகம் அவர்களின் இணக்கப்பாடு என்பவற்றுடன் இந்த ஆலோசனைக் கடிதம் வெளியிடப்படுகின்றது.

**ஒப்பம்:**

**சாமிந்த ஹெட்டிஆரச்சி**

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்


தொலைபேசி : 011 2 421786

தொலைநகல் : 011 2 431413

மின்னஞ்சல் முகவரி : pen7policydep@gmail.com


**பிரதிகள் :**

1) ஜனாதிபதி செயலாளர் - த.அ.த.
2) பிரதமர் செயலாளர் - த.அ.த.
3) செயலாளர், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு - த.அ.த.
4) செயலாளர், அரசாங்க நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - த.அ.த.
5) தேசிய வரவுசெலவுத்திட்ட பணிப்பாளர் நாயகம், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம் - த.அ.த.
6) கணக்காய்வாளர் நாயகம் - த.அ.த.